ISSN:2582-9599



# தமிழர் பண்பாட்டில் ஒருமைப்பாடு

**முனைவர் தி. பார்த்திபன்**
**உதவிப்பேராசிரியர், மெய்யியல்துறை,**
**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010.**
drparthiban1980@gmail.com

**15**

**ஆய்வுச் சுருக்கம்**

இந்தியத் தத்துவ மரபில் தத்துவத்தை ஐந்து பெரும் பிரிவாகப் பிரித்து கூறப்படுகிறது அவைகள் 1. புலன்கடந்த பொருளியல் 2. அறிவுக் கோட்பாட்டியல் 3. அளவையியல் 4. அறயியல் 5. அழகியல் இவற்றுள் அறயியல் என்பதே பெருநெறியாகப் போற்றப்படுகிறது. பெருநெறி என்பது உயர்ந்த குணத்தைக் குறிக்கும் பண்பாடாகும். நெறி என்றால் வழி, மார்க்கம் அல்லது நல்லச் செயல்களைக் குறிக்கும் என்பது பொருள். இந்த பெருநெறி பற்றியச் சிந்தனை மானிட சமூகத்திற்கு மிகவும் அவசியம் என்பதால் தெய்வப்புலவர் திருக்குறளில் அறன் வலியுறுத்தல் என்ற ஒரு அதிகாரத்தைப் படைத்துள்ளார் மற்ற அதிகாரங்களை இயல்பாக சொல்லிவிட்டு, அறத்தை மட்டும் வலியுறுத்தி இருக்கிறார், இவ்வாறு வலியுறுத்துவதன் நோக்கம் அறயியல் அல்லது பெருநெறி என்கிற ஒழுக்கச் செயல்பாடு மனிதச் சமூகத்திற்கு மிகவும் அவசியமான ஒன்று என்பதை எடுத்துக்காட்டுகிறது. உலகில் உள்ள அனைவரும் மனத்தூய்மையாகிய அறத்தோடு வாழ்தல் நன்மைப் பயக்கும், என்ற சிந்தனையைத் தெய்வ நூல் மிக அழகாகக் குறிப்பிடுகிறது.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற[1].

மனம், மொழி, மெய்களுள் மனத்தில் மாசின்றி இருத்தலே அறம். இவ் ஒழுக்கச் செயல்பாட்டை மெய்யியலில் அறயியல் என்றும், அவதார புருஷர்களான திருஞான சம்பந்தர், திருவருட் பிராகாச வள்ளலார் ஆகியோர் பெருநெறி என்று குறிப்பிடுகிறார்கள்.

இந்த உயர்ந்த பண்புகள் இன்றையச் சமூகத்தில் பெரும் கேள்விக் குறியாகவே உள்ளது, குறிப்பாக பள்ளி, கல்லூரிகளில் பயில்கின்ற மாணவர்களிடம் அறம் அல்லது நெறி என்றால் அது எங்கு கிடைக்கும் என்று கேட்கும் அவலநிலையில் உள்ளோம். தமிழ் மொழியில் உள்ள அறநூல்கள், இதிகாசங்கள், புராணங்கள், தத்துவங்கள் அனைத்தும் வாழ்வியல் நெறியை உணர்த்துகின்ற வகையில் அமையப்பெற்றன. இச் சிந்தனைகளில் உள்ள சில செய்திகளை இவ்வாய்வு மூலம் இச் சமூகத்திற்குக் குறிப்பாக மாணவர்களுக்கு உணர்த்துவதே இவ் ஆய்வின் சுருக்கம்.

**திறவுச் சொற்கள்**

மெய்யியல், பெருநெறி, ஒழுக்கம், ஒழுகுதல், பட்டுண்டு, விழுமியம், மெய்ம்மை, வையகம்,

**முன்னுரை**

ஒழுக்க நெறி என்பது ஒருவர் யாருக்கும் இடையூறு இன்றி வாழும் நெறியேயாகும். இதனைத்

தமிழ் மறை உலகத்தோடு ஒன்றி வாழ்தல் சிறந்தது என்கிறது.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்[2].

உயர்ந்தோர் சென்ற நல்லொழுக்க நெறியில் நடக்கத் தெரியாதவர்கள், பல நூல்கள் கற்றும் கல்லாதவர் என குறள் குறிக்கின்றது. ஔவையாரும் ஆத்திச்சூடியில் முதன் முதலில் அறத்தையே வலியுறுத்துகிறார். அதாவது ஒரு மனிதன் படிக்கத் தொடங்கியவுடனே முதலில் சொல்லித்தருவது அறநெறியே, உயிர் வாழ உணவு எவ்வாறு அவசியமோ, அதுபோன்று பண்பாடு நிறைந்த வாழ்க்கைக்கு பெருநெறியும் அவசியம். இதனை

அறம் செய விரும்பு[3]

என்கிறார். அதாவது தருமத்தைச் செய்யவேண்டும். பாவத்தைச் செய்யக் கூடாது என்று வலியுறுத்தப்படுகிறது. சமூக ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பதை நீதி நூலான கொன்றை வேந்தன் கீழ்க் காணுமாறு வலியுறுத்துகிறது.

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்[4]

ஊராருடன் பகை கொண்டால் அவன் தன் சுற்றத்தாருடன் அழிந்து விடுவான் என்று கூறுகிறது. தமிழ்ச் சமூகத்தில் சொல்லப்படும் பழமொழியில் ஒற்றுமைப் பண்பாடு வெளிப்படுகிறது.

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை[5]

சமூதாயத்துடன் கூடி வாழ்வதே சிறந்த வாழ்க்கை என்றும், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு போன்ற உண்மைத் தத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

விலங்கிலிருந்து மனிதர்களைப் பிரித்து உயர்த்திக் காட்டுவது ஒழுக்கச் சார்பேயாகும். ஒழுக்கம் உள்ளம் சார்ந்தது அதன் வெளிப்பாடு உடற் செயல்பாட்டில் மேன்மைப்பெறச் செய்வது. இப்படிப்பட்ட பண்பாட்டை நம் முன்னோர்கள் அறம், அறநெறி, அறயியல், ஒழுக்கம், பெருநெறி, பண்பாடு, ஒருமைப்பாடு போன்ற சொற்கள் மூலம் மனிதச் சமூகத்தை ஒழுங்குபடுத்த சொல்லப்பட்ட வார்த்தைகளாகும். இவை ஆழ்ந்த பொருண்மையுடையது. சொற்கள் வெவ்வேறாகினும் அதன் பொருள் ஒன்றையே வலியுறுத்துகின்றன. உலகம் ஒன்று, உலகில் வாழும் மனித குலம் ஒன்று என்ற ஒருமைப்பாட்டு உணர்வை எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் நோக்கம்.

**அறநெறி**

உலகம் தழுவிய உறவு நெறியைக் கண்ட பெருமை தமிழுக்கு உண்டு. இச் சிந்தனையை புறநானூறு உணர்த்துகிறது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்[6]

இவ் உலகில் வாழும் அனைவரும் ஒன்றே என்ற உலகலாவிய ஒருமைப்பாட்டுச் சிந்தனையை இப்பாடல் எடுத்துகாட்கிறது. தமிழில் பக்தி இலக்கியமாக விளங்கும் பன்னிரு திருமுறையில் பத்தாம் திருமுறையாக அமையப்பெற்ற திருமந்திரம் உலக ஒற்றுமையைப் பற்றி குறிப்பிடுகையில்

ஒன்றே குலம் ஒருவனே தேவன்[7]

என்று திருமூலர் குறிப்பிடுகிறார் அப்போழுதுதான் எல்லா மக்களும் தம் உறவினர் என்றும் எல்லா

ஊரும் தம் ஊரே என்றும் எல்லோருக்கும் தேவன் இறைவன் ஒருவனே என்றும் உணர இயலும் இப்பேருண்மையே திருமந்திரத்தின் நுண்பொருளாகும்.

தமிழகத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் புதிய பெருநெறி முழக்கத்தை எழுப்பியவர் திருவருட் பிரகாச வள்ளலார் அவர்கள். பாரத தேசிய சர்வ தேசிய ஒருமைப்பாடு என்ற அடிப்படையில் உயிர்க்குலத்தின் ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் 'ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை[8]' என்னும் மந்திர மொழியைத் தந்த முதல்வர் நம் வள்ளலார். அன்பே கடவுள் என்ற சிந்தனையை உலகத்தோடு சேர்த்து அன்பாம் அகிலமாம் கடவுளாம் என்று முழுக்கம் செய்தவர் வள்ளலார். இந்த உலகம், அதில் வாழும் உயிர், அவ்வுயிர்கள் வணங்கும் கடவுள் இவை அனைத்தும் ஒன்றாக வேண்டும். இந்த ஒருமைப்பாட்டில்தான் உலகம் அமைதிபெறும், உயிர்கள் பெருநெறி கொண்டு, இறைச்சிந்தனையில் மரணமில்லா பெருவாழ்வு பெற்று மேன்மை பெறமுடியும் என்று வாழ்ந்து காட்டியவர். பெருநெறியின் சிறப்பை வள்ளலார் குறிப்பிடும் பொது இவ்வாறு கூறுகிறார்

பெருநெறி பிடித்து ஒழுகவேண்டும்,
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்[9]

என்று பாடுகிறார். பெருநெறி என்பது மனத்தூய்மையை இங்கு குறிப்பிடுகிறார். தூய்மையான மனதில்தான் தயவு, கருணை, ஞானம் ஆகிய நற்பண்புகள் தோன்றும்.

**பண்பாடு**

பண்பாடு என்பது மனிதனது அகவுணர்வு வளர்ச்சியையும் செயலையும் குறிப்பது. பண்பாடு என்பதற்குச் சீர்படுத்துதல், செம்மைப்படுத்துதல் என்பது பொருள். உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே என்கிறது தொல்காப்பியம். இங்கு உயர்ந்தோர் என்பது பண்பாடு உடையவர்களையே குறிக்கிறது. நல்ல வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்வதே சிறந்தது என்பதைப் பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் என்று கலித்தொகை குறிப்பிடுகிறது. இக் கருத்தை பொது மறை இவ்வாறு புலப்படுத்துகிறது.

பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்[10].

பண்புடையார் வழி நடத்தலின் உலகம் நிலைப் பெறுகிறது. இன்றேல் உலகம் மண்ணுள் மடிந்து போயிருக்கும் என்று குறிப்பிடுகிறது. உலகம் நிலைபெற வேண்டும் என்றால் பண்பாட்டு நெறி அவசியம். அன்பு, ஈகை, புகழ், பெரியோர் துணை, மனிதநேயம் போன்ற உயரிய பண்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன.

பண்பாடு என்பது ஒழுக்கவியல் கோட்பாடாகும் பண்பாடு என்பது விழுமியங்களின் தொகுதி. ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், வாழ்க்கைமுறைகள், பழக்கவழக்கங்கள், சமயங்கள், வழிபாட்டுமுறைகள், அகம் புறம் சார்ந்த மரபுகள், ஆடை, அணிகலன்கள், திருவிழாக்கள், உணவுமுறை, விளையாட்டு, ஆகியவற்றை உள்ளடக்கியதே பண்பாடாகும்.

**ஒருமைப்பாடு**

ஒருமைப்பாடு என்பது ஒரு மிகச் சிறந்த பண்பாடு. இது உள்ளத்தால் உணர்ந்து, ஒன்றி

செயல்படுவதைக் குறிக்கும். ஒருமைப்பாடு என்பது ஒரு கலை, ஒரு நோன்பு, அகத்தில் ஒத்த உரிமையினராகி எல்லோரும் இன்புற்று வாழ வகை செய்வது ஒருமைப்பாடு. ஒருமைப்பாட்டு உணர்வு மெல்ல மெல்ல வளர்த்துக்கொள்ள வேண்டிய ஒரு விழுமியப் பண்பாகும். ஒருமைப்பாடு என்பது உணர்வின்பாற்பட்டது. இந்த ஒருமைப்பாட்டு நெறியை மக்களிடையே செயல்படுத்த, வலியுறுத்தத் தோன்றியவர்தான் வள்ளலார்.

நம் நாட்டு ஒருமைப்பாடு இன்றியமையாதது, ஒரு தேசத்துப் பிள்ளைகளாகப் பிறந்திருந்தும் சாதி, இனம், மொழி, சமயம் ஆகிய வேறுபாடுகளால் வேறுபட்டு இருந்தனர். இவ் வேறுபாட்டை நீக்கி உயிர்க் குலத்தின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் ஆன்ம நேய ஒருமைப்பாடு எனும், சமரச சுத்த சன்மார்க்கக் கொடியைப் பறக்கவிட்டவர். இத்தகைய ஒருமைப்பாட்டு உணர்வை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகுக்கு அளித்த பொது மறையில் திருவள்ளுவர் ஒருமைப்பாட்டுணர்வை உயர்த்திக் காட்டியுள்ளார்.

பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்[11].

பெருமைக்குரிய பண்புகளைக் கூறுதல், எல்லா உயிர்கட்கும் பிறப்பு ஒத்த தன்மை உடையது, பெருமை, சிறுமை என்ற சிறப்புகள் அவை செய்யும் தொழில்களின் வேறுபாட்டால் ஏற்படுவது. உயிர்களுக்குள் எவ்வித வேறுபாடும் இல்லை அவை ஒருமைப்பாடு உடையது.

இந்த ஒருமைப்பாட்டு உணர்வின் உயர்ந்த நிலையான உயிர் நேயத்தோடு தமிழ் நிலத்து மன்னர்கள் ஆட்சி செய்தார்கள் என்பற்கு மனுநீதிச் சோழன், கடையேழு வள்ளல்கள் செயல்பாடுகள் சிறந்த சான்றாக விளங்குகிறது. பசுவிற்கு நீதி வழங்கியது, முல்லைக்குத் தேர் கொடுத்தது, மயிலுக்குப் போர்வை கொடுத்தது போன்ற செயல்கள் உயிர் நேய ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டுகின்றன.

**மெய்யியல் (தத்துவம்)**

பொருள் தன்மைகளை ஆராய்ந்து நிலைத்த உண்மையினை நிலைநாட்டும் அறிவுக் கலைக்குத் தத்துவம் அல்லது மெய்யியல் என்று வழங்கப்பட்டது. மெய்யியல் என்பது உண்மை ஞானம். உண்மைத் தன்மையின் சிறப்பை வள்ளுவப் பெருந்தகை மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில்,

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு[12].

நிலைத்து நிற்கும் மெய்ப்பொருளை உணர்தல், எப்பொருள் எத்தன்மையில் தோன்றினும் அப்பொருளின் தோற்றம் கண்டு மயங்காமல் அதன் உண்மைப் பற்றிய மெய்ப்பொருள் காண்பது அறிவு. மனிதன் சிந்திக்கும் ஆற்றல் பெற்றதால் விலங்குகளில் இருந்து மாறுபடுகிறான் என்கிறார் அரிஸ்டாட்டில். மனிதர்கள் மனத்தூய்மையோடு ஒழுக்கச் சீலர்களாக வாழ வேண்டும். கட்டுப்பாடற்ற வாழ்க்கை பயனற்ற வாழ்க்கை. ஒவ்வொரு மனிதனுக்கும் மனக்கட்டுப்பாடு மிக மிக அவசியம். தன்னடக்கம், சிந்தனைத்தெளிவு, நல்லொழுக்கம், கருணை, பணிவு, கட்டுப்பாடு, புலனடக்கம், நேர்மை ஆகிய பண்புகளே உண்மையான ஞானமார்க்கமாகும். இவையே வாழ்வின் வெற்றிக்குரிய திறவுகோல் என மெய்யியல் எடுத்துக்காட்டுகிறது. மெய்யியல் உண்மை அறிவை உணர்த்தி, உயர்ந்த

பண்பாட்டு நெறியல், சமூக ஒருமைப்பாட்டுடன், உயர்ந்த அறநெறிக் கோட்பாட்டுடன், மனத் தூய்மையுடன் வாழ வழிகாட்டுவதே மெய்யியல். இதனை, ஔவையாரின் கொன்றை வேந்தன் குறிப்பிடுகையில்

வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை[13]

மனத்தூய்மை உடையவனுக்குக் தவறான எண்ணம் தோன்றுவது கிடையாது. வஞ்சக எண்ணம் இல்லாமையே தூய்மையாகும் என்று மெய்யியல் உணர்த்துகிறது.

**முடிவுரை**

இந்தியச் சமூகம் பழைமையானது. பல இனம், மொழி, பண்பாடு அடையாளங்களைக் கொண்டது. தத்துவம், அறிவியல், மருத்துவம் போன்ற துறையில் ஆழங்கால் பட்டது, பல அறிஞர்களைப் பெற்று ஒரு பன்முகச் சமூகமாக அது காட்சியளிக்கிறது. இந்திய நாட்டின் ஒரு பகுதியான தமிழ்நாடு பண்பாடு, தத்துவம், அறநெறி, ஆன்மிகம், ஆன்மநேய ஒருமைப்பாட்டு சிந்தனைகள் போன்றவற்றின் பிறப்பிடமாக திகழ்கிறது. மனிதனின் மனதைச் செம்மைப்படுத்த தோன்றிய அற இலக்கியங்களும் ஏராளம்.

நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்[14]

என்ற சிந்தனைக்கு ஏற்ப, உலக மக்களின் நன்மைக்காக தோன்றிய அருளாளர்கள் வாழ்ந்த மண் தமிழ்மண். சுயநலம் கருதாது பொதுநலத்துடன் வாழ்ந்தவர்கள் ஞானிகள். இவர்கள் அருளிச் சென்ற அறநெறி, பண்பாடு, ஒழுக்கம், பெருநெறி, ஆன்மிகம், ஒருமைப்பாடு இவற்றை இளைய தலைமுறையினர் நன்கு உணர்ந்து தானும் தன்னைச் சார்ந்த இந்த சமூகமும் நன்னெறியில் வாழவேண்டும். சமூகத்தை மேம்படுத்துகின்ற ஆற்றல் அறநெறி மற்றும் தத்துவத்துக்கு உண்டு. இளமை முதலே இவற்றைப் படித்தால் மாணவர்கள் சமூகத்தில் நிகழ்கின்ற, சில மன்னிக்க முடியாத குற்றங்கள் முற்றிலும் நீங்கும். அறிவாற்றல் நிறைந்த ஒழுக்கமான, உயர்ந்த பண்பாட்டுச் சமூகமாகத் தோன்றும்.

**மேற்கோள்கள்**

1. திருக்குறள், பா. 34
2. மேலது., பா. 140
3. ஆத்திசூடி, பா, 01
4. கொன்றை வேந்தன், பா. 06
5. பழமொழி
6. புறநானூறு, பா.
7. திருமந்திரம், பா. 2104
8. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, ப.13
9. தெய்வமணி மாலை, பா. 01
10. திருக்குறள், 996
11. மேலது., பா.972

12. மேலது,. பா. 355

13. கொன்றை வேந்தன், பா. 87

14. திருமந்திரம், பா.85

**துணைநூற்பட்டியல்**

1. Datta, Chatterjee, An Introduction to Indian Philosophy, Motital banarsidass Publishers, New Delhi, 2016.

2. முனைவர் சோ.ந.கந்தசாமி, தமிழும் தத்துவமும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2012,

3. தவத்திரு குன்றக்குடி அடிகளார், சிந்தனைச் செல்வம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை,

4. நீதி நூல்கள், மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2023,

5. முனைவர் அரங்க. இராமலிங்கம், திருக்குறள் எளிய உரை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2023,

6. அறயியலும், இந்தியப் பண்பாடும், மேல்நிலை இரண்டாமாண்டு, தமிழ் நாட்டு பாடநூல் கழகம், 2021.

7. தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, அறிவியல், தத்துவம், சமுதாயம், அலைகள் வெளியீட்டகம், சென்னை, 2019.

8. ம.பொ. சிவஞானம், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, சாரதா பதிப்பகம், சென்னை, 2019